## இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் --(கடன் இல 2276 எஸ்ஆர்ஜ) - 2012

### 1. அபிப்பிராயம்

------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2012 திசெம்பா் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்.

நிதிசார் கூற்றுக்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 605,860,773 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் ரூபா 9,930,822,965 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்ான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 372,819,470 | 801,451,254 | 5,792,069,684 |
| உபகரணங்களும் பொருட்களும் | 146,935,500 | 331,997,152 | 3,739,716,684 |
| வட்டிக் கட்டணங்கள் | 86,105,803 | 49,519,724 | 399,036,597 |
| மொத்தம் | 605,860,773 | 1,182,968,130 | 9,930,822,965 |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் கிடைக்கத்தக்கதான மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ. அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 47,744 | 5,438,128 |
| கூட்டுக: வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 705,403 |
| | 47,744 | 6,143,531 |
| கழி: பற்றுதல்கள் | 47,744 | 6,143,531 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

## 3. கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 இலிருந்து 2012 திசெம்பர் 31 வரை நிதியளிப்பு முகவரால் அறவிடப்பட்ட ரூபா 158,585,186 தொகையான வட்டி இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கையின் படி வட்டிச் செலவினம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக கணக்கிடப்பட வேண்டிய போதிலும் 2007 இலிருந்து 2012 திசெம்பர் 31 வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் செலுத்தப்பட்ட ரூபா 399,036,598 தொகையான வட்டி இலங்கை அரசாங்கத்திற்கும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் வட்டிச் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய வட்டி என்பனவாக கணக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வட்டிச் செலவினம் ரூபா 240,451,412 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் ரூபா 158,585,186 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 120,534,606 கூட்டுமொத்தத் தொகையான ஒரு ஒப்பந்தகாரிற்கு செலுத்தவேண்டியவைகள் பொதுத் திறைசேரியிடமிருந்து எவ்வித கடப்பாட்டு அல்லது சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பொதுத் திறைசேரியிடமிருந்தும் இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பங்களிப்புகளாக பெறவேண்டிய நிதிகளாக கணக்கிடப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) ரூபா 8,038,196,706 பெறுமதியான நான்கு ஒப்பந்தஙிகளில் இரண்டு ஒப்பந்தங்கள் பட்டியலிடப்பட்ட பூர்தியாக்கப்பட்ட திகதியுடன் ஒப்பிடும் போது 19 மாதங்களிலிருந்து 23 மாதங்கள் வரை தாமதப்பட்டிருந்தன.

ஆ) ரூபா 8,038,196,706 கூட்டு மொத்தப் பெறுமதிக்யான இரண்டு ஒப்பந்தங்கள் 2011 ஒக்தோபர் 20 மற்றும் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதிய பெரும்பகுதி பூர்த்தியாக்கல் சான்றிதழ்களில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஒப்பந்தகாரரால் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி பூர்த்தியாக்கல் அறிக்கை 2013 ஒக்தோபர் 31 வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதிசார் மீளாய்வு

## 4.1 நிதிகளின் பயன்பாடு

(அ) பட்டியலிடப்பட்ட நேர காலத்திற்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் எய்தலை மாதாந்த, காலாண்டு மற்றும் அயையாண்டு போன்றன ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி முழுமையான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டி இருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை அரசாங்கம் | மொத்தம் |
|---|---|---|---|
| உடன்பட்ட உதவுதொகை (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 46.5 | 24.0 | 70.5 |
| கூட்டுக: சமநிலை வித்தியாசம் | 2.3 | - | 2.3 |
| குறைநிரப்பு ஏற்பாடு | - | 17.9 | 17.9 |
| மொத்த ஒதுக்கீடு | 48.8 | 41.9 | 90.7 |
| 2012 திசெம்பர் 31 வரை உள்ளபடியான செலவினம் (ஐ.அ.டொலர் மில்லியனில்) | 48.8 | 35.7 | 84.5 |
| சதவீதமாக நிதிகளின் பயன்பாடு | 100 | 85.2 | 93.2 |

(இ) **நிதிசார் முன்னேற்றம்**

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் (காசு அடிப்படை) |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 48.80* | 5,500.80 | 359.39 | 345.61 | 5,488.79 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 41.87 | 4,720.10 | 158.75 | 140.93 | 3,891.03 |
| மொத்தம் | 90.67 | 10,220.90 | 518.14 | 486.54** | 9,379.82** |

** மேற்குறிப்பிட்ட தொகைகள் அட்டுறவு செலவினத்தின் தாக்கம் காரணமாக இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து வித்தியாசப்படுகின்றன

## 4.2 பௌதீக முன்னேற்றம்

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி, பரிசோதனையின் போது ஐ.அ.டொலர் 70.5 மில்லியன் கிரயத்தில் ஐந்து உப செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டன. எனினும், இறுதியாக ஒரு உப செயற்திட்டம் தவிர்க்கப்பட்டதுடன் மிகுதி நான்கு செயற்திட்டங்களின் கிரயம் திருத்தப்பட்டிருந்தன. இதன் விளைவாக, உப செயற்திட்டங்களின் மொத்தக் கிரயமானது பிரதானமாக செயற்திட்டம் அமுலாக்கலிலுள்ள தாமதம் காரணமாக 43.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னேற்றம் மற்றும் கிரயங்களின் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| | உப செயற்திட்ட இல | கிரயம் மில்லியனில் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான கிரயம் | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்பம் 2006 | திருத்தப் பட்டது | | % |
| (i) | எச்டபிள்யூ&ரீ/யூடபிள்யூஎஸ் /பிஏ1/பீஏரீ/ஐசீபீ | 35.81 | 51.93 | 50.30 | 100 |
| (ii) | பிடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ் /பிசீ1/பீஏரீ/ஐசீபீ | 13.75 | 22.13 | 20.90 | 100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | பிடபிள்யூ&ஈரீ/யூடபிள்யூஎஸ் /பிசீ2/பீஏரீ/ஐசீபீ | 7.94 | 11.0 | 10.46 | 100 |
| (iv) | டிஆர்/யூடபிள்யூஎஸ்/பிஜீ2/ எம்யூரீ/என்சீபீ | 0.62 | 0.71 | 0.69 | 100 |
| (v) | வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் | 5.12 | 4.89 | 2.24 | |
| | மொத்தம் | 63.24 | 90.66 | 84.59 | |